# எங்கள் சேவைகள்

## முகவுரை

"Informationsstelle für Ausländerinnen- und Ausländerfragen isa" (வெளிநாட்டவர்களுக்கான தகவல் நிலையமான isa) பேர்ண் பகுதியின் புலம் பெயர்வு இணைவாக்கம் தொடர்பான விடயங்களுக்கான தகுதி வாய்ந்த நிலையமாகும். இது சுயமாகச் செயற்படும் தனிச் சங்கமாக நிறுவப்பட்டுள்ளது.

isa தற்போதுள்ள அமைப்புகள் மற்றும் வளங்களை வெளிநாட்டவர்கள் பெறுதல் மற்றும் அவர்களின் பலமான பங்கு கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளை மிக முக்கியமாகக் கவனிக்கின்றது.

isa தனது இலக்குகளை **கல்வி, தகவல், ஆலோசனை, திட்டமிடுதல்வேலை** போன்ற சேவைகளின் மூலம் அடைகின்றது. isa வின் சேவைகள் டொச் மொழியிலும் வசதிப்படின் வேறு பல மொழிகளிலும் கிடைக்கும்.

## கல்வி

- டொச் மொழி மற்றும் எழுத்துகற்கும் கல்வி என்பன வேற்று மொழி பேசும் கற்பவர்களின் விசேட தேவைக்கேற்ப கவனித்தல்
- பல மொழிகளிலும் தகவல் கற்கை நெறிகளை நடத்துதல்
- intercultura எனப்படும் மொழி மற்றும் கலாச்சார பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்துதல்

## தகவல்

isa நாளாந்த புலம் பெயர்வு மற்றும் இணைவாக்கம் தொடர்பான விடயங்களை அறிந்து தகமையுள்ள கருத்தரங்காளர்களின் உதவியுடன் பல தரப்பட்ட இலக்குகளையும் கொண்டவர்களுக்கேற்ற தகவல் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து வருகின்றது.

## ஆலோசனை

isa தனிப்பட்டவர்களுக்கும் மற்றும் அமைப்புகளுக்கும் புலம் பெயர்வும் இணைவாக்கமும் தொடர்பான பல விடயங்களில் தரமான தகவல்களை வழங்குகின்றது.
தொலைபேசி மூலமான அல்லது நேரடி சந்திப்பு மூலமான தகவல்களையும் உதவிகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ள எமது கடமைநேரங்கள் தொடர்பான தகவல்களை இத் தகவல் அட்டையின் முடிவில் பெறலாம்.

## திட்டமிடுதல்வேலை

isa இடம்பெயர்ந்து வாழ்பவர்களின் நடப்பு வாழ்க்கைத்தரத்தகுதி நிலைகளைக்கண்கணித்து வருகின்றது. எங்கு பின்னடைவுகள் அறியப்படுகின்றதோ அங்கே isa தான் இதுவரையில் ஏற்படுத்திய கண்கணிப்புகளின் அடிப்படையில் உடன் உதவிகளையும் ஆரம்பத் திட்ட அடிப்படையில் செயற்பாடுகளையும் வழங்கும்.
isa வேறு அமைப்புகளுக்கு இணைவாக்கல் திட்டங்களில் திட்டமிடல், தரமுயர்த்துதல், நடைமுறைப் படுத்துதல், மதிப்பிடுதல் போன்ற விடயங்களில் ஆலோசனை, மற்றும் நெருங்கிய உதவி என்பவற்றை வழங்குகின்றது.